ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2301/37 - 2022 ඔක්තෝබර් මස 12 වැනි බදාදා - 2022.10.12
2301/37 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 94/47* (VI)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம் 6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை**

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரசன்ன ரனதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்:-

(1) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "பியன்கல ஆரன்ய சௌசனய" என அழைக்கப்படும் இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(2) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருப்பதற்கு மேலுள்ளவாறாக வெளிப்படுத்தப்பட்ட "பியன்கல ஆரன்ய சௌசனய இடப்பரப்புக்கான" உருவரைப் பௌதிகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரனதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும்
வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 23.

## அட்டவணை

## பியன்கல ஆரன்ய சௌசனய இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை நிருவாக மாவட்டத்திலுள்ள உஹான பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட (இல. W/104/5) பியன்கல கிராம அலுவலர் பிரிவினுள், வடக்கு வெவ்கம்பட்டு சிறு பிரிவின் பியன்கலயாய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமையதிபதியின் 2022, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டு திட்டம் இல. AM/UHA/2021/190 என்பதில் காணித்துண்டு இல. A (19.6163 ஹெக்டெயர்), காணித்துண்டு இல. B (32.9214 ஹெக்டெயர்), பரப்பளவில் 52.5377 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு:-

**காணித்துண்டு A**

வடக்கு : பியன்கலயாய, PP அம் 4977 இன் காணித்துண்டு 6, 4, PP அம் 3008 இன் 1, 2 மற்றும் PP அம் 4977 இன் காணித்துண்டு 2;
கிழக்கு : காணித்துண்டு 2, 4, 6, 7, 8, 9, 11, 12, 13, 15, 16, 18, 19, 21 மற்றும் PP அம் 4977 இன் 22;
தெற்கு : PP அம் 4977 பியன்கலயாய இன் காணித்துண்டு 24, 22 PP அம் 4977 இன் காணித்தண்டு 21, 19 PP அம் 3600 இன் காணித்துண்டு 1 மற்றும் PP அம் 53 இன் காணித்துண்டு 4;
மேற்கு : PP அம் 53 இன் காணித்துண்டு 4, PP அம் 3601 இன் காணித்துண்டு B, காணித்துண்டு 2 மற்றும் பியன்கலயாய.

**காணித்துண்டு B**

வடக்கு : PP அம் 53 இன் காணித்துண்டு 4 மற்றும் காணித்துண்டு A;
கிழக்கு : காணித்துண்டு A, காணித்துண்டு 9, 10, 11, 13, 14 மற்றும் PP அம் 4977 இன் காணித்துண்டு 15;
தெற்கு : PP அம் 3600 இன் காணித்துண்டு A, காணித்தண்டு 1 மற்றும் PP அம் 53 இன் காணித்துண்டு 4;
மேற்கு : PP அம் 53 இன் காணித்துண்டு 4.

EOG 10 - 0096

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.